1993 டிசம்பர் 31]

உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் சமூகநல வாரியத்தினுடைய உறுப்பினராக இருப்பதால், இந்தக் கோரிக்கையை மத்திய அமைச்சரவையில் வற்புறுத்தி அதற்குரிய உத்தரவைப் பெற்றுத் தருவார்களானால், இனிமேல் மத்திய அரசின் வழியாக பணம் வருகிறபோது, அதை மாநில அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன நோக்கத்திற்காகத் தொண்டு நிறுவனங்கள் துவங்கப்பட்டு, அரசின் அங்கீகாரம் பெற்றதோ, அந்த நோக்கத்தோடு செயல்படுகிறதா, அரசின் மூலம் பெற்ற சலுகைகள் முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை ஒவ்வொரு ஆண்டும் சமூகநலத்துறை ஆய்வு செய்து, தகுதிச் சான்றிதழ்கள் வழங்கினால்தான் மீண்டும் அரசின் சலுகைகளைப் பெற தொண்டு நிறுவனங்கள் தகுதி உடையவை என்று அரசு உத்திரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தொண்டு நிறுவனங்கள் சுயமாகவே நடைபெற்று வருகின்றன. சில தொண்டு நிறுவனங்கள்தான் அரசினுடைய உதவியை எதிர்பார்த்து தமிழகத்திலே சேவை நிறுவனங்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படி மாநில அரசினுடைய உதவிகளை, மத்திய அரசினுடைய உதவிகளைப் பெறுகிற தொண்டு நிறுவனங்களை அரசே ஆய்ந்து பார்த்துதான் அவர்களுக்கு நிதி உதவி கொடுக்கிறது. அது தவறான வகையில் செலவிடப்படும் என்று சொன்னால், உரிய நடவடிக்கையை சமூகநலத்துறையும், சமூகநல வாரியமும் எடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 114, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

114–

தமிழ்நாட்டில் வீடியோ தியேட்டர்களுக்கு உரிமம் வழங்குதல்.

10171*–திரு. எஸ். எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

[1993 டிசம்பர் 31

தமிழ்நாட்டில் வீடியோ தியேட்டர்களுக்கு உரிமம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறியிருக்கிறார்கள். அப்படி என்றால், தமிழ்நாட்டில் இதுநாள்வரை எத்தனை வீடியோ தியேட்டர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வீடியோ தியேட்டர்கள் அமைக்க உரிமம் வழங்குவதற்காக, 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ சட்டம் மற்றும் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் 1984-ஆம் ஆண்டிலே இயற்றப்பட்டாலும், கடந்த 9 ஆண்டுக்காலமாக வீடியோ தியேட்டர்களுக்கு எங்கும் லைசென்ஸ் வழங்கப்படவில்லை. ஆனால், இந்த ஆண்டு, தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெற்ற தர்மபுரி மாவட்டத்தில், காரிமங்களம் என்கிற ஊரில் வீடியோ தியேட்டர் அமைப்பதற்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்பட்டு, 'G' படிவம் லைசென்ஸ் கொடுக்கப்பட்டு இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதன்முதலாக காரிமங்களம் என்கிற ஊரிலே மங்களகரமாக தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக 9 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதுதான் வீடியோ தியேட்டருக்கு அனுமதி வழங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலே குறிப்பிட்டார்கள். கிராமங்களிலே வீடியோ தியேட்டர்கள் அவசியம் தேவையாக இருக்கிறது. ஆகவே, வீடியோ தியேட்டர்கள் அமைப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும், அதற்கு என்னென்ன தேவைகள் வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: இந்த வீடியோ தியேட்டர் அமைப்பதற்கு, மாவட்டங்களிலே அமைக்க வேண்டும் என்றால்,

1993 டிசம்பர் 31]

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும். சென்னை நகரிலே அமைக்க வேண்டுமென்றால் காவல் துறை ஆணையாளர் அவர்களும் உரிமை வழங்குகின்ற அதிகாரிகள் ஆவார்கள். வீடியோ தியேட்டர் அமைப்பதற்கு முதலில் தடையில்லாச் சான்றிதழ் பெறுதல் வேண்டும். உரிமம் வழங்கும் அதிகாரிகளால் வழங்கப்படும் என். ஓ. சி. ஓராண்டு காலத்திற்கு செல்லத் தக்கதாக இருக்கும். அது மேலும் ஓராண்டு காலத்திற்கு நீடிக்கப்பட வேண்டும் என்றால் விதிகளில் அதற்கான வகை செய்யப்பட்டிருக்கிறது. வீடியோ தியேட்டர்கள் அமைக்கப்படும் இடத்திற்கும். நிரந்தரம் அல்லது பகுதி நிரந்தர திரையரங்கம் அமைந்திருக்கும் இடத்திற்குமான இடைவெளி தூரம் 2 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டும். வீடியோ தியேட்டருக்கும், உலவும் திரையரங்கிற்கும் இடையே உள்ள தூரம் 1.609 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்கவேண்டும். இரண்டு வீடியோ தியேட்டர்களுக்கான இடைவெளி தூரம் 2 கிலோ மீட்டருக்கு குறையாமல் இருக்கவேண்டும். வீடியோ தியேட்டருக்கான வரைப்படம் ஒப்புதல் பெற்றதற்கு பிறகு. கட்டிடம் கட்டப்பட்டு முடிக்கப்பட்டவுடன் கட்டிட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின்சாரத் துறை சான்றிதழ்கள் பெறப்படவேண்டும். வீடியோ தியேட்டர்கள் இயங்குவதற்கான 'ஜி' படிவம் ஒன்றும் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 115 திரு. கோ. காளன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

115–

அம்பத்தூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்திற்கு கூடுதல் வசதி அளித்தல்.

*** 20503–திரு. கோ. காளன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகளில் விபத்துக்களினால் காயமடைகின்ற தொழிலாளர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க அம்பத்தூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் தேவையான வசதிகள் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழிற்சாலைகளில் விபத்துக்களினால் காயமடைகின்ற தொழிலாளர்களுக்கு மருந்தக நேரத்தில் முதலுதவி சிகிச்சை அளிக்க அம்பத்தூர் இ.எஸ்.ஐ. மருந்தகத்தில் தேவையான வசதிகள் உள்ளன. உள்ளிருப்பு நோயாளியாக அவசர சிகிச்சை பெற வேண்டியிருந்தால்